தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 02/ந/2024

நாள்:06.08.2024

திரு. V. பழனிவேலு,
கொறநாடு, மயிலாடுதுறை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி, மயிலாடுதுறை மாவட்டம் ... எதிர்மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V.பழனிவேலு என்பவரின் 03.08.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2023ல் பெறப்பட்டு, 02/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V.பழனிவேலு என்பவர் தமது 03.08.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"மயிலாடுதுறை நகராட்சியில் கடந்த 2020–21ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக குறிப்பிட்ட இரண்டே மகளிர் சுயஉதவிக்குழு (1) வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழு (2) ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் DBC தடுப்புப்பணிக்கு ஈடுபடுத்தி ஊதியம் வழங்கப்பட்டதில் முறைகேடுகள் நடந்திருப்பதாக தெரிய வந்ததால், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விபரங்கள் கோரப்பட்டதில் மயிலாடுதறை நகராட்சி ஆணையரின்

பொதுத்தகவல் அலுவலர், கடிதஎண். 142,நாள். 06.06.2023ல் தகவல் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவில் இருந்து 60 உறுப்பினர்களுக்கான ஊதியப்பட்டியல் மற்றும் குழு உறுப்பினர்கள் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் கடிதத்துடன் வழங்கப்பட்ட சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பட்டியல், ஊதியப்பட்டியல் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்த்ததில் கீழ்க்குறிப்பிட்ட முறைகேடுகள் தெரிய வந்துள்ளது.

(1) சுயஉதவிக்குழு திட்ட நெறிமுறைகளின்படி ஒரு சுயஉதவிக்குழுவிற்கு குறைந்தபட்ச உறுப்பினர்கள் 12 அதிகபட்ச உறுப்பினர்கள் 19 ஆகும். ஆனால் கடிதத்தடன் வழங்கப்பட்ட பட்டியலின்படி (1) வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழுவில் 30 உறுப்பினர்களும் (2) ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழுவில் 30 உறுப்பினர்களும் இருப்பதாக பட்டியல் தரப்பட்டுள்ளது. இது திட்டநெறிமுறைகளுக்கு புறம்பானதாகும்.

(2) மகளிர் சுயஉதவிக்குழு திட்ட நெறிமுறைகளின்படி உறுப்பினர்கள் " Belong to same area or habitation" என்று உள்ளது. ஆனால் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட மகளிர் சுய் உதவிக்குழு உறுப்பினர் பட்டியல் நகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டும், வெளி தாலுகாக்களில் வசிக்கும் நபர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே சட்ட நெறிமுறைகளுக்கு புறம்பாக சுய உதவிக்குழு உருவாக்கி ஒப்புதல் அளிக்கப்பட்டது முறைகேடாகும்.

மேற்கண்ட இரண்டு சுயஉதவிக்குழுக்களும் மகளிர் சுயஉதவிக்குழு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மகளிர் சுயஉதவிக்குழுவில் ஆண்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

எனவே மகளிர் சுயஉதவிக்குழு உருவாக்கி ஒப்புதல் அளித்தது முறைகேடானது. நபர்வாரி மாத ஊதியப்பட்டியலை உறுப்பினர்கள் பட்டியலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டதில், குழுவில் உறுப்பினராக இல்லாத நபர்களுக்கு ஊதியம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

தொழில் வரி விதிகளின்படி ஊதியம் என்பது தினக்கூலி உள்ளிட்டதாகும். தற்போதுள்ள விகிதாச்சாரத்தின்படி ரூ.45000 முதல் ரூ.60000 வரையில் ஆறுமாத வருமானம் இருப்பதால், ரூ.510 அரையாண்டுக்கு தொழில்வரி செலுத்த வேண்டும். இதன்படி ரூ. 1,020 ஆகும். மேற்கண்ட நபர்களிடம் தொழில் வரி பிடித்தம் செய்யப்பட்டதாக தெரியவில்லை. 2020–21ம் ஆண்டு முதல் 2022–23ம் நிதி ஆண்டு வரையில் மொத்தம் 6 அரையாண்டுகள், தொழில் வரி பிடிக்காத காரணத்தினால் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

எனவே தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு EPF பிடித்தம் செய்யப்படவில்லை என்று தெரியவந்துள்ளது. மேலும் தினக்கூலி பணியாளர்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. தினக்கூலி பணியாளர்கள் நேரடியாக நகராட்சியில் பணியாற்றியுள்ளதால் அவர்களுக்கான தினக்கூலியை சம்பந்தப்பட்ட பணியாளர்களின் வங்கிக்கணக்கில்தான் ECS மூலம் செலுத்த வேண்டும். ஆனால் மொத்தத்தொகையை மேற்கண்ட இரண்டு சுயஉதவிக்குழுக்களுக்கு காசோலையாக வழங்கியதன் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் தரங்கம்பாடி வட்டம், ஆறுபாதி கிராமம், விளநகர் பெரியார் நகரில் வசிக்கும் (1) ரம்யா (2) கலைமணி (3) வாசுகி (4) கே.பாலமுருகன் ஆகியோரின் பெயர்கள்யாவும் ஆறுபாதி கிராமத்தில் மகாத்மா

காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் job card பதிவு செய்து வருகிறார்கள். குறிப்பாக ரம்யா க/பெ. பாலமுருகன் என்பவர், 100 நாள் வேலை திட்டத்தின்கீழ் 2022–2023ம் ஆண்டில் வேலை செய்து ஊதியம் பெற்றுள்ளார். ரம்யா என்பவரின் குடும்பத்தினர் அனைவரும் ஆறுபாதி கிராமத்தில் 100 நாள் வேலை உறுதித்திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ளார்கள். ரம்யா என்பவர் 100 நாள் வேலைத்திட்டத்தில் பணி செய்து ஊதியம் பெற்ற நிலையில் அவரது பெயரையும் அவரது கணவர் பாலமுருகன் என்பவரின் பெயரையும் சட்ட விரோதமாக மயிலாடுதுறை நகர் சாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழுவில் போலியாக பெயர் சேர்த்து, மாத ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட்டதில் கடந்த 2022–2023ம் ஆண்டில் மட்டும், தினக்கூலியாக மயிலாடுதுறை நகராட்சியில் மொத்தம் ரூ.1,18,840/– (ரூபாய் ஒரு இலட்சத்து பதினெட்டாயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) வழங்கப்பட்டுள்ளது.

100 நாள் வேலை திட்டத்தின்கீழ் வேலை பார்த்து ஆறுபாதி கிராமத்தில் ஊதியம் பெற்ற நிலையில் இந்த ரூ.1,18,840/– மோசடியாக செலவிடப்பட்டதால் நிதி கையாடல் நடந்துள்ளது. இதேபோல் மகளிர் சுயஉதவிக்குழுவில் பெயர் இடம் பெற்றுள்ள ஆறுபாதி பெரியார் நகரைச்சேர்ந்த வாசுகி மற்றும் கலைமணி ஆகியோர்களின் பெயர்கள் ஆறுபாதி கிராமத்தில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின்கீழ் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் நன்னிலம் வட்டம், கீரனூர் கிராமம், குமாரமங்கலம் கிராமத்தில் வசித்து வரும் (1) அமுதா (2) மாலதி (3) ராஜேஸ்வரி ஆகியோர்களின் பெயர்களும் 100 நாள் வேலை திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு மாலதி என்பவர் 2022ம் ஆண்டில் பணி மேற்கொண்டு ஊதியமும் பெற்றுள்ளார். எனவே இவர்களின் பெயர்களை போலியாக சேர்த்து நிதி மோசடி நடந்துள்ளது. எனவே சுய லாபத்திற்காக நகராட்சி ஆணையர், அலுவலக மேலாளர், கணக்கர், சம்பந்தப்பட்ட உதவியாளர் (அ) இளநிலை உதவியாளர் ஆகியோரால் நிதி கையாடல், போலியாக ஆவணங்கள் தயாரித்தும், விதிமுறைகளுக்கு புறம்பாக 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை மகளிர் சுயஉதவிக்குழுவில் சேர்த்துள்ளதும், மகளிர் சுயஉதவிக்குழுவில் ஆண்களின் பெயர்களையும், வெளி கிராமங்களில் 100 நாள் வேலை திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள நபர்களின் பெயர்களை போலியாக சேர்த்து மோசடியாக நிதி கையாடல் செய்துள்ளதால் தகுந்த விசாரணை மேற்கொள்ளவும், கையாடல் செய்த நபர்களை உடனடியாக தற்காலிக பணிநீக்கம் செய்து நகராட்சிப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி (8–ன்கீழ்) தற்காலிக பணிநீக்கம் செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மயிலாடுதுறை ஆணையரிடம் கோரப்பட்டது. மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது 12.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மயிலாடுதுறை நகராட்சியில் டெங்கு தடுப்பு களப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பணியாளர்களை வெளிமுகமை (out source) அல்லது மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மயிலாடுதுறை நகராட்சியில் ஏற்கனவே டெங்கு களப்பணியாளராக பணிபுரிந்தவர்கள் வாழ்வாதாரம் பாதிக்காதபடி அவர்கள் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் அமைத்து தங்களுக்கு பணி வாய்ப்பு கேட்டு கொண்டதன் பேரில் (1) வளரும்

நிலா மகளிர் சுயஉதவிக்குழு (2) ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு ஆகிய இரண்டு குழுக்களுக்கும் ஒரு குழுவில் 30 பணியாளர்கள் என இரண்டு சுயஉதவிக்குழுக்களுக்கும் 60 பணியாளர்கள் வழங்க பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழுவில் சரியாக பணிக்கு வராதவர்களை மற்றும் பணியை சரிவர செய்யாதவர்களையும் அவ்வப்போது மாற்றி பணியாளர்கள் வழங்குவது குழுதலைவிகள் பொறுப்பு. பணிக்கு ஆட்கள் சப்ளை செய்ய இரண்டு குழுக்களுக்கும் 60 பணியாளர்களை சப்ளை செய்துள்ளார்கள். மேற்படி பணியாளர்களுக்கு மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு தினக்கூலி ஊதியம் காசோலையாக வழங்கப்பட்டு வங்கி மூலம் ECS செய்து பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்ற விளக்கம் தெரிவித்துள்ளார்.

மேலும், டெங்கு களப்பணியாளர்கள் மயிலாடுதுறை நகராட்சி பகுதிக்கு அப்பாற்பட்டும வெளி தாலுக்காக்களில் இருந்தும் நியமிக்கப்பட்டுள்ளதாக புகார் உள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் (1)ஜி.ஜெ.லதா, (2) எஸ். அமுதா, (3) சிவரஞ்சனி, (4) ஜெ.லதா, (5) எம்.மாலதி, (6) எஸ்.வரதராஜன், (7) ஆர்.தினேஷ், (8)எம்.ராஜேஸ்வரி, (9) கே.பாலமுருகன், (10 பி.ரம்யா, (11) பி.கலைவாணி, (12) எஸ்.வாசுகி ஆகியோர் முகவரி அடையாள சான்று வெளிதாலுகா என உள்ளது. ஆனால் அவர்களுடைய பிள்ளைகள் மயிலாடுதுறை நகரத்தில் உள்ள பள்ளிகளில் படிக்க வைத்து வாடகை வீட்டில் தங்கி வேலை செய்கிறார்கள். மேலும் வரிசை எண்.8 முதல் 12 வரை உள்ள பணியாளர்கள் தற்போது பணிபுரியவில்லை. இதில் எவரும் வெளிமாநிலத்தவரோ, வேறு எங்கும் கிராமபுரத்தில் வேலை செய்பவர்களோ இல்லை என்ற விளக்கம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மகளிர் சுயஉதவிக்குழு பணி உத்தரவில் ஆண் களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக புகார் தொடர்பாக டெங்கு களப்பணி வீடுதோறும் சென்று மேல்நிலை நீர் தொட்டி, கீழ்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பாழடைந்த நீண்ட நாட்களாக பூட்டிய வீடுகளில் ஏண்ணீர் உள்ள பொருட்களை ஆய்வு செய்யவும் ஆண் களப்பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்ற விளக்கம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

மகளிர் சுயஉதவிக்குழுவில் உறுப்பினர் அல்லாதோர் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது குறித்து விளக்கம். மகளிர் சுயஉதவிக்குழு (1) வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழு (2) ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு இரண்டுக்கும் தலா 30 பணியாளர்கள் என மொத்தம் 60 பணியாளர்கள் சப்ளை செய்ய பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதோர் வழங்கப்பட்டு பணி நடைபெறுகிறது. இதில் சரிவர வேலை பார்க்காதவர்களையும் அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டு பணி நடைபெறுகிறது என்ற விளக்கம் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு களப்பணியாளர்களுக்கு உள்ளாட்சி நிதி தணிக்கை ஆய்வாளர் அவர்கள் குறிப்பு கோப்பின்படி மேற்படி பணியாளர்களுக்கு 6 மாதத்திற்கு ஒருமுறை தொழில் வரி பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்ற விளக்கம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பணியாளர்களுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை தொழில்வரி மகளிர் சுயஉதவிக்குழு மூலம் பிடித்தம் செய்யப்பட்டு நகராட்சியில் செலுத்தப்படுகிறது. களப்பணியாளர்களில் ஒரு சிலர் மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிவதனால் அவர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

விதிகள்படி செய்யப்படவேண்டியிருந்தாலும், பிடித்தம் செய்ய இயலவில்லை என்ற விளக்கம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

களப்பணியாளர்கள் தங்கள் தினக்கூலி ஊதியம் 2020 ஆண்டு முதல் அவர்களது வங்கி கணக்கில் ECS மூலம் வழங்கப்படுகிறது. இரண்டு மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதனால் ஊதியம் காசோலையாக மகளிர் குழுவிற்கு வழங்கப்பட்டு பணிநாட்களை கணக்கிட்டு ஊதியம் பணியாளர்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மேலும் ஆறுபாதி கிராமம் பெரியார் நகரில் வசிக்கும் (1) ரம்யா, (2) கலைமணி, (3) வாசுகி, (4) பாலமுருகன் உட்பட 15 நபர்கள் மயிலாடுதுறை நகராட்சி MCC (Micro Compost Centre) நுண்ணுயிரி உரகிடங்கில் மக்கும் குப்பை, மக்காத குப்பை பிரித்து கொடுக்கவும் மக்கும் குப்பையை உரம் தயாரிக்கும் தொட்டியில் கொட்டி உரமாக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டது. மேற்படி பணியாளர்கள் மயிலாடுதுறைக்கு அருகில் வசிப்பவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு வாழ்வாதாரமாக குப்பை பிரிக்கும் பணிக்கு பயன்படுத்தி அவர்களது ஊதியம், வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளது. வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு மட்டும் ஒரு சிலருக்கு ஊதியம் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்கள் 2022 ஆம் ஆண்டு வரை நகராட்சி உரக்கிடங்கில் பணி புரிந்துள்ளார்கள். அவர்கள் பெயரில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு 100 நாள் வேலை ஊதியம் எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது குறித்தும் தங்களுக்கு தெரியாது என தெரிவித்துள்ளார்.

மனுதாரரும் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரும் 23.07.2024 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.07.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

இந்நிலையில் மனுதாரர் திரு.V.பழனிவேலு அவர்கள் தமது 17.07.2024 நாளிட்ட மனு ஒன்றை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். அம்மனுவிலும் தமது 03.08.2023 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்களையே தெரிவித்துள்ளார். மேலும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கான ஆதார ஆவணங்களை ஆணையாளர் முன்னிலை படுத்த வேண்டும் என கோரியுள்ளார்.

மனுதாரர் திரு V.பழனிவேலு அவர்கள் 23.07.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மயிலாடுதுறை நகராட்சியில் வளரும் நில மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் DBC தடுப்பு பணிக்கு ஈடுபடுத்தி ஊதியம் வழங்கப்பட்டதில் முறைகேடு உள்ளது. 30 + 30 பணியாளர்கள் சப்ளை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கான உத்தரவு நகல் சுயஉதவிக்குழு தலைவிக்கு வெளி நபர்களை 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்ப்பதற்கு அதிகாரம் உள்ளதா ? வெளிநபர்களை அவர்கள் இஷ்டம் போல் சேர்க்கவும் நீக்கவும் அதிகாரம் உள்ளதா ? இருப்பின் ஆணையின் நகல். மகளிர் சுய உதவிக்குழு திட்ட நெறிமுறைகளின்படி உறுப்பினர்கள் வெளி தாலுகா/வெளி மாநிலத்தில் உள்ளவர்களை நகராட்சி உதவிக்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளதா ? மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினர்கள் அல்லாத 9 நபர்கள் 30.06.2022 முதல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்து. உரக்கிடங்குகளில் நகராட்சியில் நிலையான சுகாதாரப்பணியாளர்கள் தூய்மைப்பணியாளர்கள் எத்தனை பேர் பணியில் உள்ளனர் ? மகளிர் சுயஉதிவிக்குழுவிற்கு தினக்கூலி காசோலையாக மற்றும் ரொக்கமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது முரணாக உள்ளது. தேசிய வேலை

வாய்ப்புத் திட்டத்தில் பணிபுரிந்த விபரம் போன்றவை தெரிவிக்கப்படவில்லை. மேற்கண்ட புகார்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் இன்று நேரில் தெரிவித்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

எதிர்மனுதாரரான மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் அவர்கள், சுகாதார ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்கள் 23.07.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மயிலாடுதுறை நகராட்சி டெங்கு தடுப்பு களப்பணிக்கு (DBC) (1) வளரும் சுயஉதவிக்குழு (2) ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு என இரண்டு குழுக்கள் 60 பணியாளர்களை வழங்க உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெறுகிறது. இப்பணியாளர்களுக்கு தினக்கூலி ஊதியம் மகளிர் சுயஉதவிக்குழு மூலம் வங்கி கணக்கில் ECS மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், டெங்கு களப்பணிக்கு விருப்பம் இல்லாதவர்கள் மற்றும் உடல் ரீதியாக இயலாதவர்கள் தவிர்க்கப்பட்டு, உறுப்பினர் அல்லாதவர்களும் பணியில் சேர்க்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் வெவ்வேறு குழு உறுப்பினர்கள் ஆவார்கள். மேலும் நகராட்சியில் மகளிர் சுயஉதவிக்குழு மூலம் 30 + 30 = 60 பணியாளர்களை வழங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. குழு உறுப்பினர்களுக்கு மட்டும் பணியில் சேர்க்க வேண்டும் என நிபந்தனை ஏதும் உத்தரவில் தெரிவிக்கப்படவில்லை என்பதால் வேறு மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களையும் இப்பணியில் சேர்க்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். நகராட்சி எல்லைக்குட்பட்ட விலாசத்தில் இவ்விரு குழுக்களும் மகளிர் திட்ட இயக்குநரகத்தின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தற்போது ஜூலை 2024 முதல் மகளிர் சுயஉதவிக்குழு ஒன்றிற்கு 20 உறுப்பினர்கள் வீதம் 3 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டு 3 x 20 = 60 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். டெங்கு தடுப்பு களப்பணிக்கு புதர்போன்ற இடங்கள், மேல்நிலை நீர்தேக்க தொட்டி, பழுதடைந்த வீடுகளிலும் பணிபுரிய ஆண் பணியாளர்கள் தேவைப்படுவதனால் அவர்களை இப்பணிக்கு சேர்க்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் இந்த ஆண் பணியாளர்கள் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் உறவினர் ஆவார்கள். இவர்களின் மூலம் குழு உறுப்பினர்கள் குடும்பத்திற்கு வருவாய்கிடைக்க பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். நகராட்சிக்கு அருகில் உள்ள கிராமங்களில் வசிக்கும் பணியாளர்கள் தங்களின் பிள்ளைகளின் கல்விக்காக மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட விலாசத்தில் தங்கி வேலை பார்த்து வருகின்றனர். இதில் எவரும் வெளி மாநிலத்தை சேர்ந்தவர்கள் இல்லை.

மகளிர் சுயஉதவிக்குழுவில் உறுப்பினர்கள் அல்லாத (1) ஜெசியா (2) குணசேகரன் (3) அருண்குமார் (4) பிரேமா (5) செந்தில் (6) சுகிர்தா (7) நாகவள்ளி (8) செல்வராணி (9) மதுபாலா ஆகியோர் டெங்கு தடுப்பு பணிக்கு அமர்த்தப்பட்டு பணிபுரிந்தனர். இவர்கள் 30.06.2022 அன்றுடன் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆறுபாதி கிராமத்தை சார்ந்த (1) ரம்யா (2) கலைமணி (3) வாசுகி (4) பாலமுருகன் ஆகியோர், 2022–2023ம் ஆண்டில் நகராட்சி நுண்ணுயிர் உரக்கிடங்கில் (எம்சிசி சென்டரில்) மக்கும், மக்காத குப்பை என பிரித்தெடுக்கும் பணிக்கு சேர்க்கப்பட்டு பணிபுரிந்தனர். இவர்கள் ஜூன் 2022 மாதத்துடன் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை வாய்ப்பு திட்டத்தில் பணிபுரிந்துள்ள விபரம் எதுவும் எங்கள் கவனத்திற்கு வரவில்லை. மேலும் இப்பணியாளர்கள் 30.06.2022 அன்றுடன் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு பணி உத்தரவு கொடுக்கப்பட்டு பணி நடைபெறுகிறது. பணியாளர்கள் தினக்கூலி ஊதியம் காசோலையாக மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டு பணிபுரிந்தவர்களுக்கு வங்கி கணக்கில் ஊதியம் வரவு வைக்கப்படுகிறது. அதன் விபரம் பலமுறை மனுதாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி ஆணையாளர் நேரிடையாக தினக்கூலி ஊதியத்தை வங்கி கணக்கில் வரவு வைக்க வழிவகை இல்லை என்கிற விபரம் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

மேலும் 23.07.2024 நாளிட்ட தமது அறிக்கை ஒன்றையும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில், 12.10.2023 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களையே தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிக்கை, ஆணையாளர், சுகாதார ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு. V. பழனிவேலு என்பவர் தமது புகார் மனுவில்

- மயிலாடுதுறை நகராட்சியில் வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழு, ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் DBC தடுப்பு பணிக்கு ஈடுபடுத்தி ஊதியம் வழங்குவதில் முறைகேடு நடந்துள்ளது.
- சுய உதவிக்குழு திட்ட நெறி முறைகளின்படி சுயஉதவிக்குழுவிற்கு அதிகப்படியான உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- சுயஉதவிக்குழு உறுப்பினர் பட்டியலில் நகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டு வெளி தாலுக்காக்களில் வசிக்கும் நபர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.
- குழுவில் உறுப்பினராக இல்லாத நபர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
- தினக்கூலி பணியாளர்களின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படவில்லை.
- தினக்கூலியை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் ECS மூலம் வழங்காமல் காசோலையாக வழங்கியது.
- விதிகளின்படி 2020–21ம் ஆண்டு முதல் 2022–23ம் நிதியாண்டு வரை 6 அரையாண்டுகளுக்கு தொழில் வரி பிடித்தம் செய்யப்பட்டதாக தெரியவில்லை.

இக்குற்றச்சாட்டுகளுக்கு இரு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும் 60 பணியாளர்களை வழங்க உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெறுகிறது என்றும் இவர்களுக்கு வங்கி மூலம் ஊதியம் ECS மூலம் வழங்கப்படுகிறது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நெறிமுறை Roc.No.2571/2017/ஜோ நாள். 28.11.2017 மற்றும் இதே எண்ணிட்ட 23.04.2018 நாளிட்ட நெறிமுறைகளின்படியும், அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்படியும் டெங்கு

பணியாளர்கள் நியமனம் நடைபெறுகிறது. ஆண் களப்பணியாளர்கள் நியமனமும் நகராட்சி நிர்வாக இயக்குநரால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தான் நடைபெறுகிறது என்று தெரிவித்து அதற்கான நகல்களையும் ஆணையாளர் சமர்ப்பித்துள்ளார்.

தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் காசோலையாக மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டு பணிபுரிந்தவர்களுக்கு அவர்களது வங்கி கணக்கில் ECS மூலம் ஊதியம் வரவு வைக்கப்படுகிறது என்றும், டெங்கு களப்பணியாளர்களுக்கு தொழில் வரி 2020–2021 மற்றும் 2022–2023ம் ஆண்டுக்கு உள்ளாட்சி நிதி தணிக்கை ஆய்வாளர் அவர்கள் குறிப்பு கோப்பின்படி 6 மாதத்திற்கு ஒரு முறை தொழில் வரி பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புகார் மனுதாரர் திரு.V.பழனிவேலு அவர்களின் புகார்கள் அனைத்திற்கும் உரிய பதில் அறிக்கையும் அதற்குரிய ஆவணங்களையும் ஆணையாளர் சமர்ப்பித்தபோதிலும் இந்நேர்வில் தெரிவித்துள்ள வளரும் நிலா சுயநிதிஉதவிக்குழு மற்றும் ஸ்ரீசாய்பாபா மகளிர் சுயநிதிஉதவிக்குழுவின் கணக்குகள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள விபரங்களின் உண்மை தன்மையினை ஆய்வு செய்ய சிறப்பு தணிக்கை மேற்கொள்ளவும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறைக்கு (Local Fund Audit) இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் தமது புகாரினை, நகராட்சி நிர்வாக இயக்குநர், மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநருக்கும் மனு அளித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத சூழ்நிலையில் முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார். மனுதாரர் ஒரு மூத்த குடிமகனாவார். அவரை இப்படி அலைக்கழித்தது ஏற்கத்தக்கது அல்ல. எனவே இனி வருங்காலங்களில் பொதுமக்களிடமிருந்து வரும் புகார் மனுவில் அலட்சியம் காட்டாமல் உரிய நடவடிக்கை எடுத்து அவர்களின் கோரிக்கைகளை சரி செய்திடுமாறு மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 06–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.V.பழனிவேலு, எண்.48, திருமஞ்சனவீதி,
கொறநாடு, மயிலாடுதுறை – 609 001.
மயிலாடுதுறை மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை.
மயிலாடுதுறை மாவட்டம்

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்
(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்.
சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்
6/6